

# ஓர் அழைப்பு... ஓடி வரும் தீர்வு!







## திராவிட மாடல் அரசு

61

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

‘மக்கள்தான் அரசு’ என்பது பங்கேற்பு ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று. ஒரு நல்ல அரசு என்பது, மக்களுக்கான நலத் திட்டங்களைத் தீட்டுவதோடு நின்றுவிடாமல், களத்தில் அவை கடைக்கோடி பயனாளிக்கும் சென்று சேர்கிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் எங்கு, என்ன பிரச்சினை இருக்கிறது, அதைச் சீர்படுத்தி எவ்வாறு அந்தத் திட்டங்களைச் செழுமைப்படுத்துவது என்பது தெரியும்.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் உரிய காலத்தில் பயனாளிகளுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொரு துறையின் பொறுப்பாகும் என்பதை எப்போதும் வலியுறுத்தி வருகிறார், நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள்.

அந்த வலியுறுத்தலின் செயல் வடிவங்களாக, நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, ‘முதல்வரின் முகவரி’, ‘களத்தில் முதலமைச்சர்’, ‘மக்களைத் தேடி முதல்வர்’ எனப் பல முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வரிசையில், பயனாளிகளுக்கான திட்டங்களின் சேவைத் திறனை மேலும் கூர்மைப்படுத்தும் விதமாகத் தொடங்கப்பட்டிருக்கும் நடவடிக்கை தான், ‘நீங்கள் நலமா?’ எனும் முன்னெடுப்பு.

### குறையும், அரசு-மக்கள் இடைவெளி

நமது ‘திராவிட மாடல் அரசு’, ஏழை எளிய விளிம்புநிலை மக்கள் பயனடையும் வகையில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, ‘புதுமைப் பெண் திட்டம்’, ‘நான் முதல்வன் திட்டம்’, ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘தோழி தங்கும் விடுதிகள்’ எனப் பல்வேறு நலத்திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது.

அந்தத் திட்டங்கள், அந்தத் திட்டங்களுடைய பயன்கள் எல்லாம் உரிய மக்களுக்கு, உரிய நேரத்தில் சென்று சேர்ந்திருக்கிறதா என்பதை உறுதி செய்வதற்கு **‘நீங்கள் நலமா’** எனும் ஒரு புதிய திட்டத்தை 2024 மார்ச் 4 அன்று மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான, முதன்மையான நோக்கம் என்பது, மக்கள் மற்றும் அரசுத் துறைகளுக்கு இடையேயான இடைவெளியைக் குறைப்பதுதான். அந்தத் திட்டங்கள் பற்றி, மக்களின் கருத்துகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் அந்தத் திட்டங்களை மேம்படுத்த, இந்தப் புதிய நடவடிக்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### முதல்வர் முதல் மாநகர ஊழியர் வரை

இந்தப் புதிய நடவடிக்கை, ‘முதல்வரின் முகவரி’ என்னும் துறையால் செயல்படுத்தப்படு கிறது. முதற்கட்டமாக, அரசுத் துறைகளின் செயல்பாட்டில் உள்ள நலத் திட்டங்களில் பயன்பெற்ற பயனாளிகளிடமிருந்து கருத்துகள் மற்றும் பின்னூட்டங்கள், இதற்கென இயக்கப்படும் இணையதளம் மூலம் பெறப்படும். அந்தக் கருத்துகள், பின்னூட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், நலத்திட்டங்களின் பயன்கள், மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், சேவைகளின் தரத்தினை மேம்படுத்தவும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

இதன் அடுத்த கட்டமாக, பொது மக்களுக்கு அரசுத் துறைகளால் வழங்கப்படும் சேவைகளின் மீதும் கருத்துகள் மற்றும் பின்னூட்டங்கள் பெற்று, அந்தச் சேவைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தப் புதிய திட்டத்தை நடைமுறை படுத்துவதில் நமது முதலமைச்சர் முதல் கடைநிலை மாநகர ஊழியர் வரை, அரசுத் துறைகளில் உள்ள அனைவரும் பங்காற்று கிறார்கள். முதலமைச்சர், அமைச்சர்கள், தலைமைச் செயலர், அனைத்துத் துறை செயலாளர்கள், காவல்துறைத் தலைமை இயக்குநர், துறைத் தலைவர்கள், மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப் பாளர்கள்/ மாநகர காவல் ஆணையர்கள் என ஒவ்வொருவரும் மக்களின் கருத்துகளுக்குக் காதுகொடுக்கப் போகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் கருத்துகள், ‘நீங்கள் நலமா’ வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளன. இந்தத் தளம், முதலமைச்சர் முதற்கொண்டு மாநகர காவல் ஆணையர்கள் வரை எல்லோராலும் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தளம் மக்களின் கருத்துகளைப் பெறும் ஒரு திறந்த வெளி அமைப்பாகச் செயல்படுவதால், அந்தக் கருத்துகள் மீது, திட்டங்களில் உள்ள பிரச்சினைகள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தீர்வு காணப்படும். மேலும், இந்தத் தளத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில், அனைத்து அரசுத் திட்டங்கள் குறித்த கையேடுத் தொகுப்பு ஒன்றும் பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படும்.

> இந்தப் புதிய நடவடிக்கையின் கீழ், பதவி வாரியாக நிர்ணயம் செய்யப்பட்ட தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு, மக்களின் கருத்துகளை அறிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மாதம் ஒன்றுக்கு கீழ்க்கண்ட எண்ணிக்கையிலான அழைப்புகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.
>
> ❖ தலைமைச் செயலாளர் 10 அழைப்புகள்.
>
> ❖ துறை செயலாளர்கள், காவல்துறைத் தலைமை இயக்குநர் 30 அழைப்புகள்.
>
> ❖ துறைத் தலைவர்கள், மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர்கள் 40 அழைப்புகள்.
>
> ❖ மாவட்ட ஆட்சியர்கள் 40 அழைப்புகள்.
>
> ❖ மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் / மாநகர காவல் ஆணையர்கள் 40 அழைப்புகள்.

### முதல் நாளில் 500-க்கும் மேல் அழைப்புகள்

மார்ச் 4-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட இந்தப் புதிய திட்டம், மார்ச் 6-ஆம் தேதியே செயல்பாட்டுக்கு வந்துவிட்டது. அன்று இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்கள், பயனாளிகளிடம் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, அன்றைய நாளே அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் சுமார் 500க்கும் மேற்பட்ட பயனாளிகளைத் தொடர்புகொண்டு துறைவாரியாக நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறிந்தனர்.

தொடர்ந்து, மார்ச் 16 அன்று முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பயனாளிகளை நேரடியாகக் காணொலி வாயிலாகத் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த அவர்களது பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்கள். அவ்வாறு அவர் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர், மகளிர் சுய உதவிக் குழுவின் கீழ் பயன்பெற்றவர், ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கிப் பயின்று வரும் கல்லூரி மாணவி, ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ கீழ் பயன்பெற்று வரும் இல்லத்தரசி ஒருவர், ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர் எனப் பலரிடமும் பேசினார் முதலமைச்சர் அவர்கள்.

இப்படி, அரசின் சேவைகளை மேம்படுத்த, மக்களிடம் கருத்துகள் கேட்டு, அவர்களையும் ஆட்சி நிர்வாகத்தில் பங்கு வகிக்கச் செய்கிற பாங்குக்காகவே, இன்னும் பல தலைமுறைகளுக்கு ‘திராவிட மாடல்’ வெற்றி பெறும்..!

**...சாதனை தொடரும்**

**மக்களிடம் கருத்துகள் கேட்டு, அவர்களையும் ஆட்சி நிர்வாகத்தில் பங்கு வகிக்கச் செய்கிற பாங்குக்காகவே, இன்னும் பல தலைமுறைகளுக்கு ‘திராவிட மாடல்’ வெற்றி பெறும்..!**

### வடைகள் ஊசிப்போகும் நேரம்!




நிலாவில் பாட்டி சுட்ட வடை கதையைச் சொல்லி குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும் காலம் போய், மக்களுக்கு மோடி சொன்ன பொய்களையே கதைகளாகச் சொல்லி, சோறூட்டும் காலம் வந்துவிட்டது. குஜராத் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு இன்றைக்கு இந்திய ஒன்றிய பிரதமராக அவர் சுட்டுக் கொண்டிருக்கும் வடைகளை 111 பக்கங்களில், 4 அத்தியாயங்களாக ‘மோடி சொன்ன பொய்கள்’ என்ற தலைப்பில், நூலாக்கியுள்ளார் ஊடகர் எஸ்.ஏ.எம் பரக்கத் அலி. D-STOCK பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

குஜராத் முதலமைச்சராக இருந்தபோது, 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், பிரதமராக இருந்த போது என இந்நூலில் மோடி சொன்ன பொய்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இந்தியரின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம், 10 லட்சம் பேருக்கு அரசு வேலை, மதுரையில் எய்ம்ஸ் கல்லூரி எனக் காற்றில் அடித்து விட்ட பொய்களை இடம், தேதி குறிப்பிட்டு, அவற்றுக்கான தனது ‘கமென்ட்’டுகளையும் நூலாசிரியர் பதிவு செய்துள்ளமை சிறப்புக்குரிய ஒன்று. தமிழ்நாட்டுக்கும், இந்திய ஒன்றியத்துக்கும் மோடி சொல்லிய பொய்களைப் பட்டியலிடும் இந்நூல் தேர்தல் நேரத்து ஆயுதம்.

### ஃப்ளாஷ்பேக்



எம்.முத்துராமலிங்கம்



**முதல் சமத்துவபுரம்!**

1996-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் வாழக்கூடிய **‘பெரியார் நினைவு சமத்துவபுரம்’** உருவாக்கப்படும் என அறிவித்தார். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் உருவாக்கப்பட்ட முதல் சமத்துவபுரத்தினை 1997-ஆம் ஆண்டு அவர் நேரடியாக வந்து திறந்து வைத்தார். இந்த விழாவில், அன்றைய சபாநாயகர் பி.டி.ஆர், அமைச்சர்கள் ஆற்காட்டார், தமிழ்க்குடிமகன், சமயநல்லூர் செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் காசி விஸ்வநாதன் ஐ.ஏ.எஸ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**–எம்.முத்துராமலிங்கம்,**
**சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்,**
**திருமங்கலம், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**ராஜராஜன் சிலை நிறுவிய கலைஞர்!**

1972-ஆம் ஆண்டு, ஏப்ரல் 14-ஆம் தேதி, தஞ்சை பெரிய கோயிலுக்கு வெளியே மாமன்னன் ராஜராஜனுக்கு சிலையைத் திறந்து வைத்தார் கலைஞர். கோயிலைக் கட்டிய ராஜராஜனுக்கு, கோயிலுக்குள் சிலை வைக்க வேண்டும் என்று கருதினார். ஆனால், தொல்பொருள் துறை அனுமதி அளிக்கவில்லை என்பதால், கோயிலுக்கு வெளியே பூங்கா அமைத்து, அங்கு சிலையை நிறுவினார். அதன் திறப்பு விழாவில் ஐந்து லட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

428

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131